**பன்னல பிரதேச சபை - 2022**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பன்னல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து பன்னல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள்,

புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் நீர் பவுஸரின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 950,000 ஆக இருந்த போதிலும் அது ரூபா 450,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்யப்படும். | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 138,750 பெறுமதியான பியெஸ்ட்ரா வகையான 03 அலுமாரிகள், 25 பிளாஸ்ரிக் கதிரைகள் ரூபா 333,805 பெறுமதியான 15 இயந்திரங்களும் இயந்திர உபகரணங்களும் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட கேஸ் இருப்பின் பெறுமதி ரூபா 71,243 ஆனது நாட்குறிப்பு 59 மற்றும் 60 இன் மூலம் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | -மேற்படி- | களஞ்சிய இருப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். - |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 16 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களுக்கு இணங்கிய மொத்தப் பெறுமதிக்கும் பட்டோலைக்கிணங்கிய மொத்த பெறுமதிக்குமிடையேயான வித்தியாசம் ரூபா 98,695,020 ஆகும். | நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற மீதியையும் பட்டோலைகளில் காணப்படுகின்ற மீதியையும் சரிசெய்வதற்கு அடுத்துவரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக மீதியினை இனங்கண்டு கணக்கு வைத்தல் வேணடும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நி.பி 371 | உரிய செயற்பாடு பூர்த்தயடைந்த உடன் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 329,564 தீர்த்துவைக்கப்படாத முற்பண மீதியாகும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அடுத்துவரும் காலங்களில் அப்பிழை சரி செய்யப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | ரூபா 4,483,750 தொகையான காலங்கடந்த 24 வைப்புக்கள் தீர்த:து வைக்கபடபவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | 2022 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை 8.1.1 ஆம் பிரிவு | சொத்துக்களை மாற்றும் போது அத்திகதியில் சொத்தின் பெறுமதியை உள்ளடக்கி முழுமையான ஆவணம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்தின் பெறுமதியை உள்ளடக்கி முழுமையான ஆவணத்தை தயாரிப்பது தொடர்பாக விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 96,940,370 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 84,242,735 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை (பட்டியலிடப்பட்ட வலுமானத்தில்) | 2021 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை (பட்டியலிடப்பட்ட வலுமானத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 15,362 | 13,932 | 14,257 | 2,562 | 15,523 | 11,974 | 11,803 | 3,025 |
| வாடகை | 32,469 | 30,154 | 26,730 | 3,674 | 30,391 | 27,977 | 19,893 | 5,809 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,551 | 956 | 996 | - | 1,661 | 853 | 853 | - |
| ஏனைய வருமானம் | 20,564 | 16,674 | 17,021 | - | 369,679 | 21,382 | 21,391 | - |
| மொத்தம் | 69,946 | 61,716 | 59,004 | 6,236 | 417,254 | 62,186 | 53,940 | 8,834 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,562,508 ஆன நிலுவை வீதவரி மற்றும் வரி மீதியினை அறவீடு செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி மற்றும் வரி நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை மீதியினை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,961,693 நிலுவை வாடகை மீதி அறவிட வேண்டி இருந்தது. | நிலுவை வாடகைப் பணத்தை அறவீடு செய்வதற்காக மாதாந்த வருமான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அறவீடு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிலுவை மீதியினை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(இ) நீதிமன்ற தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 10,192,722 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 219,324,293 ஆகும். | 2022-12-31 ஆந் தகிதிய உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதியினை துரிதமாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்.

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப்பயன்பாட்டு சேவைகள் மற்றும் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தலும் நிருவகித்தலும், மக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரிகள் முதலிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **தவணை நியதிச்சட்டம்** | | |
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை நியதிச்சட்டம் விதிக்கக்கூடியதாக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31ஆந் திகதி வரையும் 20 விடயங்கள் சம்பந்தமாக துணை நியதிச்சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்படாத விடயங்கள் சம்பந்தமாக துணை நியதிச்சட்டங்களை விதிப்பதற்கும் தேவையான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு வருமானம் உழைக்கக்கூடிய வாய்ப்புக்களை இனங்கண்டு துணை நியதிச்சட்டத்தினை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஒரு மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக 2020 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து 2022 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு விலைமனுக்களைச் சமர்ப்பித்த 08 நிறுவனங்களுக்கு மத்தியில் 03 நிறுவனங்கள் பதில்களை | இந்த இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தும் மின்சாரம் வழங்கல் கருவி தொடர்பாக அந்த விலை மனுவில் உள்ளடக்கப்பட்டிருக்கவில் | பெறுகையானது நிர்யிக்கப்பட்ட நடைமுறைக்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காட்டியிருக்கவில்லை எனக்காட்டி நீக்கப்பட்டு நீக்கிய விலைகளுக்கு மத்தியில் ஆகக் குறைந்த விலையினை விட ரூபா 484,500 அதிக பெறுமதிக்கு ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகை நடைமுறையினுள் ஒரு டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தும் கொள்வனவு செய்ததன் பின்னர் சுப்பர் டீசலினை ஈடுபடுத்தி அந்த இயந்திரத்தினை செயற்படுத்த வேண்டி இருந்தது. மேலும் பெறுகை நடைமுறைகளுக்கு முரணாக 2022 மார்ச் 21 ஆந் திகதிய 597 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சரின் மூலம் ரூபா 1,091,610 பணம் செலவு செய்து கொள்வனவு செய்த நிறுவனத்தின் மூலம் மின்பிறப்பாக்கி இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தது. | லை. இயந்திரத்தினை ஸ்தாபித்ததன் பின்னர் அதனை ஸ்டாட் செயவதற்கு தாமதம் ஏற்பட்டதனால் உத்தரவாத காலத்தினுள் இயந்திரத்தில் ஏற்படக்கூடிய கோளாறுகளை இனங்கண்டு அதற்கான பரிகாரத்தை ஈடுபடுத்துவதற்கும் உரிய நிறுவனத்தின் கோளாறுகளைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையும் எங்களுக்கு கிடைக்காமல் போவதற்கு வாய்ப்பு காணப்பட்டது. | |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 05 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 228,772,941 ஆக இருந்ததுடன் காலப்பகுப்பாய்விற்கு இணங்க 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலத்திற்குரிய மீதிகளின் மொத்தம் ரூபா 225,091,708 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகள் காலத்தை மிகைத்த கணக்குகளின் மொத்தம் ரூபா 169,374 ஆகும். | 1988 இலிருந்து 2011 வரையான காலத்தில் தீர்த்துவைக்கப்பட்டது என்பதற்கான சாட்சிகள் இல்லாத முற்பணங்களின் மீதி உள்ளடக்கப்பட்டதனால் அது தொடர்பாக மேலும் பரீட்சித்துப் பார்த்து உரிய சரிசெய்தல்கள் அடுத்துவரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். | கிடைக்க வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் 06 விடயங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 346,812,351 ஆக இருந்ததுடன் காலப்பகுப்பாய்விற்கு இணங்க | இன்னும் செலுத்த வேண்டிய பணம் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து பார்த்து அப்பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை துரிதமாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகள் வரையான காலம் தொடர்பான கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 291,821,628 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளை மிகைத்த கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 50,000 ஆக இருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 54,940,722 மீதிக்காக காலப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | காலப்பகுப்பாய்வினை அடுத்துவரும் காலங்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலப்பகுப்பாய்வினை கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (உ) | 2019 சனவரி 20 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க வடமேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கடை வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் சபையின் குத்தகை வாடகையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டிருந்த 19 கடைகள் சம்பந்தமாக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த சபையின் வணிக கட்டிடத்தொகுதி கடைகளுக்கான மாதாந்த வாடகை மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி இருந்தும் கடந்த காலத்தில் காணப்பட்ட நாட்டின் நிலைமையின் அடிப்படையில் மதிப்பீடு நடவடிக்கை தாமதமடைந்திருந்தது. | புதிய மதிப்பீட்டினை மேற்கொண்டு கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **ஊழியர் கடன்** | | |
| மீளாய்வாண்டின் இறுதியளவில் சபையில் கடமைகளில் ஈடுபடாதிருந்த 16 ஊழியர்களிடமிருந்து ரூபா 224,744 தொகையான அறவிட வேண்டிய கடன் மீதி காணப்பட்டது. | உத்தியோகத்தர்களிடமிருந்து தற்பொழுது அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைக் கடன் மீதியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத:துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) காணிகளும் கட்டிடங்களும் இயந்திரங்களும், இயந்திர உபகரணங்களும், தளபாடங்களும் பொருத்திகளும் சொத்துக்களுக்குரிய நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களுக்குரிய பதிவேட்டினை பேணுவது தொடர்பான அறிவுறுத்தல்கள் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |
| (ஆ) சபையின் ஜீப் வண்டி மற்றும் வேன் பொறுப்பேற்கப்படாதிருந்ததுடன் 121 மயானங்களில் 75 மயானங்களுக்காக ஒப்படைப்பு கட்டளை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. | சபையினால் பெர்றுப்பேற்பதற்குரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேணடும். |

**3.6 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நுகேகொட கிங்கம் சங்கத்தினால் 2005 ஆம் ஆண்டின் போது அன்பளிப்பாக சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 5,000,000 பெறுமதியான நிசான் வகையான தீயணைப்பு வாகனமும் ரூபா 1,500,000 பெறுமதியான ஸ்கவேட்டர் வாகனமும் 2023 ஏப்ரல் 20 ஆந் திகதி வரையும் உப அலுவக வளவில் விளைவற்றுக் காணப்பட்டது. | ஓடுவதற்கு பொருத்ததமான நிலையில் இல்லாத நிசான் வகையான தீயணைப்பு வாகனமும் ஸ்கவேட்டர் வாகனமும் ஏலத்தில் விற்பதற்குத் தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | விளைவற்றுக் காணப்படும் சொதது்க்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 03 வருமான தலைப்புக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 35.3 சதவீதத்திலிருந்து 66.8 சதவீதம் வரையான முரண்களும் 84 செலவு விடயங்களுக்கு வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 40 சதவீத்திற்கு மேற்பட்ட நிதி ஏற்பாடு செலவு செய்யப்படாத முரணும் அவதானிக்கப்பட்டதன் காரணமாக பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அரசாங்கம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் சுற்றறிக்கைக்கு இணங்க சில அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியாமை ஏற்பட்டிருந்தது. | ஆண்டின் தொடக்கத்தில் வருமானம் மற்றும் செலவுகள் சம்பந்தமாக முன்னறிதல் மேற்கொண்டு பாதீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |